ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2370/04 - 2024 පෙබරවාරි මස 05 වැනි සඳුදා - 2024.02.05
*2370/04 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலந்தொட பிரதேச செயலகப் பிரிவில் மாகம பத்துவ சிறிய பிரிவில் ரிதியகம (இ.கி.தி 564) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் H/AMB/2012/623 மற்றும் 2012.12.04 ஆம் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பில் விரிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தையுடைய காணித்துண்டின் எல்லைகள்:

1. **துண்டு 'A' - ரிதியகம கிராமத்தில் நீர்ப்பாசன காணி என்றழைக்கப்படும் அரச காணி - விஸ்தீரணம்: 0.4553 ஹெக்டயார்**

வடக்கு: நீர்ப்பாசன திணைக்களம் உரிமை கோருகின்ற காணி மற்றும் பிரதேச சபை வீதி; கிழக்கு: பிரதேச சபை வீதி மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் உரிமை கோருகின்ற காணி; தெற்கு மற்றும் மேற்கு : நீர்ப்பாசன திணைக்களம் உரிமை கோருகின்ற காணி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல.: 4-3/9/2012/WS/76.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
''மிஹிகத மெதுர'', ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 30.

EOG 02 - 0039